# வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் சேவைகள் மற்றும் கொடுப்பனவு வழங்குதல் நடைமுறைகள் தொடர்பான கொள்கை ஆவணம்

## தூரநோக்கு

நன்கு பாதுகாக்கப்பட்ட சிறுவர் பரம்பரையினைக் கொண்ட சிறந்த சமுதாயம்

## செயல்நோக்கு

சிறுவர் சம்பந்தமான தேசிய மாகாண கொள்கைகளை அமுல்படுத்த உதவுதல் மற்றும் அவர்களின் உரிமைகளிற்கு ஆதரவளித்துப் பாதுகாப்பளிக்கையில் பாதுகாப்பற்ற சிறார்கள் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சிறார்களின் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் சிறார்கள் ஆகியோருக்கு சம வாய்ப்பினை அளித்தல்

## முக்கிய கடமைகள்

- சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல்
- அநாதைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் பிழையாக வழிநடத்தப்பட்டோருக்கும் சுக வாழ்வளித்தல்.
- நலனோம்பு மற்றும் ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குதல்
- நல்லாட்சி வழங்குதல்.

## பணிக்கூறுகள்

2016ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வடக்கு மாகாண சபை நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிச்சட்டத்தின் பாகம் Iஇன் 5ஆம் பிரிவின் கீழ் "சிறுவருக்கான சட்டப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளையை ஆக்குவதற்கு நீதிமன்றத்திற்கு உதவியளித்தல், சிறுவருக்கென மாற்றீடான கவனிப்பு முறைமையை ஏற்பாடு செய்வதற்கு உதவியளித்தல், சிறுவர் தவறாளர்களை புனர்வாழ்வு மற்றும் புனருத்தாரணம் கருதி நிறுவன மயப்படுத்தலும், அவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சியை ஏற்பாடு செய்தலும் மீள சமூகமயப்படுத்தலும், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உள சமூக ஆதரவை ஏற்பாடு செய்தல், வறுமை அல்லது வேறு சமூக தேவைப்பாடுகள் காரணமாக வாழ்வில் சீர்குலையக்கூடிய சிறுவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தலும் சிறுவர் உழைப்பைத் தடுத்தலும், சிறுவர் தொடர்பில் மிகவும் கருணை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிதிசார் நடவடிக்கைகளை எடுத்தல் அத்துடன் தேவையிலுள்ள சிறுவருக்குச் சேவைகளை ஏற்பாடுகள் செய்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் கட்டாயமானதாகும்."

2016ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வடக்கு மாகாண சபை நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிச்சட்டத்தின் பாகம் IIஇன் 7ஆம் பிரிவின் கீழ் "திணைக்களத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் ஏற்பட்ட செலவீனங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் திணைக்களத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்."

நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற சிறுவர்களுக்கான பராமரிப்பினை வழங்குகின்ற

1. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்
2. பதிவு செய்யப்பட்ட பாலகர் பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும்
3. பொருத்தமான நபர் ஆகியோருக்கு

பின்வரும் கொடுப்பனவுகள் வழங்குதல்.

## நிமித்தக் கொடை(Ad-Hoc Grant)

### 1. Personal Grant-தனிநபர் நன்கொடை

- **சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலுள்ள பிள்ளைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான கொடுப்பனவு**

நீண்ட நாட்பட்ட நோய் மற்றும் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சைக்கு (Clinic) சென்றுவரும் நோய்க்குட்பட்ட, புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட, இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்கு போக்குவரத்து மற்றும் ஊட்டச்சத்து வழங்குவதற்காக காலாண்டுக்கு ஒருமுறை 10,000/= வழங்குதல்.

பிள்ளையின் வறுமை நிலை தொடர்பாக சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரால் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்பிள்ளையின் வறுமை நிலைபற்றி பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்ட அறிக்கை ஆணையாளரால் பெற்றுக்கொள்ளப்படும்.

- **நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கொடுப்பனவு**

நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்பட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான மரபணு பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தினால் கோரப்படும்போது மரபணுப் பரிசோதனைக்குரிய கொடுப்பனவு வழங்குதல்.

- **பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவு**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலுள்ள பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் கட்டணத்திற்குரிய கொடுப்பனவு வழங்குதல்.

- **உபசரணை,தங்குமிடச் செலவுகளுக்கான கொடுப்பனவு**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், சான்றுபெற்ற பாடசாலை, பாதுகாப்பு இல்லம், அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லங்களிலிருந்து நீதிமன்ற வழக்குகளின் பொருட்டு அல்லது ஏதாவது தேவையின் பொருட்டு அழைத்துச் செல்லும் பிள்ளைகளுக்கான உபசரணை, தங்குமிடச் செலவுகளுக்கான கொடுப்பனவு (மாகாண நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக) வழங்குதல்.

நா.வேதநாயகன்
ஆளுநர்
வட. மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

- **வைத்தியசாலை அலகுகளுக்கு மற்றும் நீதிமன்றங்களுக்கு வரும் வலுவிழந்த பிள்ளைகளுக்கான கொடுப்பனவு**

வைத்தியசாலை அலகுகளுக்கு மற்றும் நீதிமன்றங்களுக்கு வரும் பிள்ளைக்கு மாற்று உடை, காலணி, உணவு, சிற்றுண்டி, போக்குவரத்து போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக பிள்ளையொன்றுக்கு ஒரு தடவை 2000/=க்கு மிஞ்சாதவாறு கொடுப்பனவு வழங்குதல்

**2. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பாலகர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கான தனிப்பட்ட நன்கொடை**

- 2016ஆம் ஆண்டின் 4ம் இலக்க வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச் சட்டத்தின் பிரிவு 30(1) இற்கு அமைவாகவும், கௌரவ ஆளுநர் வடமாகாணம் அவர்களால் அனுமதிக்கப்பட்ட G/NPC/A8/H/A/2021ம் இலக்க 2021.06.23ம் திகதிய சுற்றறிக்கை வரைபுக்கு அமைவாகவும்

  திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளையொன்றிற்கு ஒரு மாதத்திற்கு ரூபா 500.00 வீதம் 12 மாதங்களுக்கு வழங்குதல்.

- 2016 ஆம் ஆண்டு இல 03 வடக்கு மாகாண பாலகர் பகற் கவனிப்பு நிலைய நியதிச் சட்டத்தின் பிரிவு 21ற்கு அமைவாக, சுகாதார அமைச்சர், வடக்கு மாகாணத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக

  உரிமம் பெற்ற பாலகர் பகற் கவனிப்பு நிலையமானது கவனிப்பு சேவைக்கு கட்டணம் எதுவும் அறவிடாமல் அல்லது மாதம் ஒன்றிற்கு ஒரு பிள்ளைக்கு ஐந்நூறு ரூபாய்க்கு குறைவான சேவைக் கட்டணத்துடன் செயற்படுமானால், உரிமம் பெற்ற பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் முகாமையாளர் அது சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அத்தகைய நிலையத்திலுள்ள ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 500.00 சிறுவர் ஒவ்வொருவரினதும் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டிய நிவாரணம் பேணுகை நன்கொடையாக வழங்குதல்.

**3. Maintenance Grant**

**கட்டடங்கள் பராமரிப்பு (Building Maintenance)**

2016ஆம் ஆண்டின் 4ம் இலக்க வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச் சட்டத்தின் பிரிவு 30(1) இற்கு அமைவாக, கௌரவ ஆளுநர் வடமாகாணம் அவர்களால் G/NPC/A8/H/A/2021ம் இலக்க 2021.06.23ம் திகதிய சுற்றறிக்கை வரைபு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில்

- கட்டடத் திருத்தம், அத்தியாவசிய கட்டட விஸ்தரிப்பு போன்றவற்றிற்கு திணைக்களத்தின் நிதி ஏற்பாடு, தேவைகளின் அத்தியாவசியத் தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மேற்படி நன்கொடை வழங்குதல்.

- கட்டடத் திருத்தம், கட்டட விஸ்தரிப்பு தொடர்பான ரூபா 500,000 வரை உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீடானது பொறியியலாளராலும், ரூபா 200,000 வரை அரச

நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

தொழில் நுட்ப உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்குதல்.

**உபகரணங்கள், தளபாடங்கள், பொருட்கள் பராமரிப்பு (Equipments Maintenance)**

- பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், சமையல் உபகரணங்கள், சிறுவர் உடை, காலணி போன்றவற்றிற்கான தேவைகளின் அத்தியாவசியத் தன்மை, திணைக்களத்தின் நிதி ஏற்பாடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு நன்கொடை வழங்குதல்.

4. **பொருத்தமானநபர் கொடுப்பனவு**

- Children and Young Persons Ordinance under section 35 (1) (d)இற்கு அமைவாகவும்,

  சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம், வடமாகாணத்தின் 2008.07.02 ஆம் திகதிய NP24/2/10-2-2008 இலக்க சுற்றுநிருபம் மற்றும் சமூகநலத்துறைத் திணைக்களம், வடமாகாணத்தின் NP/24.2/01/02/06 – Fit Cer– 01 இலக்க 2009.03.17 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும்,

- கொடுப்பனவு மாதாந்தம் 2000/= வீதம் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை (2000x4=8000) வழங்குதல்.

5. **சிறுவர் மகிழ்வூட்டல் செயற்பாடு**

- **சிறுவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பராமரிக்கப்படுகின்ற நிறுவனமயமாக்கப்பட்ட சிறுவர்கள் நிறுவனத்தின் உள்ளே கட்டமைக்கப்பட்ட நேர அட்டவணையின் கீழ் தொடர்ந்தும் ஒரே இயங்கு நிலையில் செயற்படுவதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற மனஅழுத்தங்களைக் குறைக்கும் முகமாகவும் அவர்களுடைய உள ஆரோக்கியம், மகிழ்வூட்டல், பொழுதுபோக்கு, மனநிலை ரீதியாக மீண்டும் தயாராகுதல் ஆகியவற்றின் மூலம் புத்துணர்ச்சி ஏற்படுத்தும் நோக்காக கொண்டு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் பராமரிக்கப்படும் சிறுவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லல் அவசியமாகும். இதன் நோக்கமாக ஒரு பிள்ளையை வெளிமாகாணத்திற்கு 2 நாட் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதற்கு ரூபா 3000/=வீதம் கொடுப்பனவு வழங்குதல்.

N. [signature]
நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

[signature]
சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

6. **சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களில் விசேட அடைவைப் பெற்றுக்கொண்ட சிறுவர்களுக்கான கொடுப்பனவு**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களில் விசேட அடைவைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான கொடுப்பனவானது பின்வருமாறு வழங்கப்படுதல்.

- க.பொ.த சாதாரண தரத்தில் 5A இற்கு மேல் பெற்று சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு ஒருவருக்கு 10,000/=வீதம் வழங்கப்படுதல்.
- க.பொ.த உயர் தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான பிள்ளைகளுக்கு ஒருவருக்கு 10,000/=வீதம் வழங்கப்படுதல்.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்குமேல் பெற்று சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு ஒரு
- வருக்கு ரூபா 5,000/=வீதம் வழங்கப்படுதல்.
- விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்ற போட்டிகளில் மாகாண மட்டத்தில் முதல் 3 இடங்களுக்குள் பெற்ற பிள்ளைகளுக்கும் தேசிய மட்டத்தில், சர்வதேச மட்டத்தில் பரிசில் பெற்றுக் கொண்ட அல்லது பங்கு பற்றிய பிள்ளைகளுக்கும் கொடுப்பனவு வழங்கப்படும். (மாகாணம், தேசியம், சர்வதேசம் என்பவற்றில் ஒரே போட்டியில் பங்குபற்றியவருக்கு உயர் விருதினைப் பெற்றுக் கொண்டமைக்கு மட்டும் வழங்கப்படுதல்.)

    1. மாகாண மட்டம் - 5,000/= (1, 2, 3 ஆகிய இடங்களைப் பெற்ற பிள்ளைகளுக்கு)

    2. தேசியமட்டம் - 10,000/= (1, 2, 3 ஆகிய இடங்களைப் பெற்ற அல்லது பங்கு பற்றிய பிள்ளைகளுக்கு)

    3. சர்வதேச மட்டம் - 15,000/=(பரிசில் பெற்ற அல்லது பங்குபற்றிய பிள்ளைகளுக்கு)

N. [signature]
நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

[signature]
சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்